**செய்தி வெளியீடு எண்: 447** **நாள் : 15.09.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.9.2015) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உற்சவர் திருக்கல்யாண மண்டபம் மற்றும் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் ஓய்வுக் கூடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 25 கோடியே 49 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இணை ஆணையர் அலுவலகக் கட்டடம், அன்னதானக் கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், அன்னதானம் உணவருந்த காத்திருப்போர் கூடம், முடி காணிக்கை மண்டபம், தர்ப்பண மண்டபம், பணியாளர்கள் குடியிருப்பு, மாணவியர் தங்கும் விடுதி, கூடுதல் வகுப்பறைகள், கணினி ஆய்வகக் கட்டடம், கருணை இல்லம், வாகனம் நிறுத்துமிடம், நீரேற்று நிலையம், குளியல் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரித்தல், வழிபாடுகளை நடத்துதல், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருதல் போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உற்சவர் திருக்கல்யாண மண்டபம் மற்றும் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் ஓய்வுக் கூடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், வேலூர் மாவட்டம் – வாலாஜாபேட்டை அருள்மிகு பச்சையம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம் – அஸ்தம்பட்டி அருள்மிகு மாரியம்மன், பிடாரியம்மன் மற்றும் விநாயகர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் – கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் – சூரியனார்கோயில்

அருள்மிகு சிவசூரியப்பெருமான் திருக்கோயில், கொட்டையூர் அருள்மிகு கோட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர் அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் – திருவலஞ்சுழி அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம் – திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், திருமணஞ்சேரி அருள்மிகு உத்வாகநாதசுவாமி திருக்கோயில், கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், அனந்தமங்கலம் அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம் – திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருவேற்காடு அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்;

மதுரை மாவட்டம் – அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், திருவேடகம் அருள்மிகு ஏடகநாதசுவாமி திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார்சத்திரம் அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில், தேனி மாவட்டம் – பெரியகுளம் நகர், தென்கரை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்– முப்பந்தல் கிழக்கு அருள்மிகு இசக்கியம்மன் திருக்கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருநெடுங்களம் அருள்மிகு நெடுங்களநாதசுவாமி திருக்கோயில், அரியலூர் மாவட்டம்– கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுகவரதராஜப் பெருமாள் திருக்கோயில், சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் 5 கோடியே 43 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 24 அன்னதானக் கூடங்கள்;

திருவண்ணாமலை – அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் 31 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட அன்னதானக் கூடம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானம் உணவருந்தக் காத்திருப்போர் கூடம்;

திருநெல்வேலி மாவட்டம் – திருக்குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் – சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய இடங்களில் 4 கோடியே 27 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதிகள்;

நாமக்கல் – அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் 98 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் மண்டபங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சிவகங்கை மாவட்டம் – திருக்கோஷ்டியூர் அருள்மிகு சௌமிய நாராயணப்பெருமாள் திருக்கோயில், வேலூர் மாவட்டம் – வாலாஜா இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் ஆகிய இடங்களில் 1 கோடியே 81 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் ஓய்வுக் கூடங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 1 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முடிகாணிக்கை மண்டபம்;

ஈரோடு மாவட்டம் – பவானி நகர் அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் 61 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தர்ப்பண மண்டபம்;

சேலம் – அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் 20 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கருணை இல்லம்;

திருவள்ளூர் மாவட்டம் – திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 1 கோடியே 17 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணியாளர் குடியிருப்புகள்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின், பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் 70 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் தங்கும் விடுதி;

திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆறு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கணினி ஆய்வகக் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம் – சீர்காழி வட்டம், மேலையூர், பூம்புகார் கல்லூரியில் 34 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வகக் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறையில் 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் அலுவலகக் கட்டடம்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், மேற்கு கிரிவீதி, கோசாலை வளாகத்தில் 78 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டணமில்லா வாகனம் நிறுத்துமிடம்;

ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் பக்தர்களின் பயன்பாட்டிற்காக பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வசதி பெறும் வகையில் 1 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நீரேற்று நிலையம்;

சிவகங்கை மாவட்டம் – திருக்கோஷ்டியூர் அருள்மிகு சௌமிய நாராயணப்பெருமாள் திருக்கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி விடுதி மற்றும் அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி தேவஸ்தானம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி விடுதி ஆகிய இடங்களில் 2 கோடியே 12 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் குளியலறைகள் மற்றும் கழிவறைகள்;

என மொத்தம் 27 கோடியே 9 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். காமராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. சண்முகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., ராம்கோ குழும நிறுவனத்தின் தலைவர் திரு.பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜா, துணைத் தலைவர் திரு.பி.ஆர். வெங்கட்ராமா ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 15.9.2015